# பூங்காற்று

கவிதைத் தொகுப்பு

ஆக்கம் :-
செல்வி.மு.குயிலரசி

வெளியீடு
தமிழ்ச்சங்கம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
கோப்பாய்.
27-09-2011

# உள்ளடக்கம்


* துணிவே துணை
* வைகறை
* பாடிப் பறந்த குயில்
* வாழ்க்கையின் வசந்தங்கள்
* தமிழ் இன்பத் தமிழ்
* துன்பக் கேணி
* வெண்ணிலவே
* கற்பனைக் கனவுகள்
* பூங்காற்று
* சொல்ல மறந்த கதை
* மரணித்த மானிடம்
* சுமைகள்
* விட்டில் பூச்சிகள்
* என் சுவாசக் காற்றே
* நொறுங்குண்ட இதயம்
* நிலையான வாழ்வு தேடி
* இன்ப மழை
* வாடா மலர்

# துணிவே துணை

அச்சமுடன் அனுதினமும் ஆடிநின்ற வாழ்வு போதும்
அரக்கர்களின் அடாவடித்தனத்தால் அலைந்தது போதும். நாம்
சிறுமை கொண்ட மனதுடன் வாழ்ந்தது போதும்
சங்காரம் செய்வோனின் சதியை வென்று எழுந்துநில்
துணிவுடன்.

கயவரின் துன்பக் கோலால் கலைந்தது போதும்
குயில் போல பாடித்திரிய துணிவுடன் நின்றிடு
திண்டாடித் திரியும் தீமை நாளை விட்டிடு
தீமையும் துன்பமும் வந்தது போதும் துணிவுகொள்.

தீயவரின் தீமையுடன் நின்ற காலம் போதும்
துணையிழந்த மரமாய் தவித்தது போதும் - நீ
வீரமுள்ள மங்கையாக வாழ எண்ணு உன்
வீரக்கால்கள் போடட்டும் இன்று பயணத்தை

பிரிவுடனே பின்வாங்கும் - காலம் வேண்டாம்
பிரிந்து போன கணவனை தினமும் எண்ணி
பரிதவிக்கும் உனது நல்மனதை நிலைப்படுத்து
பாரங்கள் இல்லாமல் எழுந்துநில் துணிவுடன் இன்று

துணையாக நீ எண்ணிய கணவன் எங்கே உன்
தூய மனம் புரியவில்லையா அந்தக் கயவனுக்கு
துள்ளித் திரியும் மழலையை மறந்தா சென்றான்
துணிவு கொள்ளு அதுவே உனக்கு துணையென்றும்.

அன்னையை பார்க்கிலும் அத்தானை நேசித்தாயோ
அன்புப்போர்வை கொண்ட அந்தக் கயவனெங்கே
தீராத வேதனையுடன் தவிப்பதுமேன் அன்னையே
திகைப்புகள் மறந்திடு துணிவு கொள் இன்று.

கலங்கி நின்று கண்ணீர் வடித்தது போதும்
காலத்தை சோகத்தால் மூடியதும் போதும் இப்போ
தீராத கவலையுடன் திகைப்பதும் போதும் - நீ
தளர்வின்றி எழுந்து நில் துணிவை எண்ணி

துக்கத்துடன் முகத்தை வாடவைத்தது போதும்
துணையின்றி தவித்து தள்ளாடியதும் போதும் - உன்
சேயின்று பாடுகின்றேன் எழுந்து வா அன்னையே
சேலையை அழகாக உடுத்தி துணிவுடன் வா

காலங்கள் செய்த கலக்கங்கள் போதுமடி இப்போ
கனிவுடனே வந்து விடு அச்சத்தை அகற்றிவிட்டு
துணிவினை உனது துணையாக எண்ணி நீ
துக்கமுகம் மறந்து வந்துவிடு துணிவுடனே.

துக்கத்தை உனக்குத் கொடுத்த என் தந்தையை
துணிவுடனே மறந்து விடு என் சிரிப்பால்
திகைப்புடன் வாழ்வதை மறந்துவிடு நீயும்
தித்திப்பு கொண்டு எழுந்துவா துணிவே உன் துணை

## வைகறை

புலர்ந்திடும் புதிய காலையிலே அங்கு
பூங்காற்று மெல்ல வரும் வேளையிலே
திறந்திட்ட சின்ன கதவூடாக மெல்லவரும் - அந்த
தினகரனின் சின்ன ஒளிபட்டு வரும்
சின்னச் சூட்டால் எழுந்திடும் மானிடமே.

காரிருள் நீங்கிடவே உங்கள் மனதில்
கலந்திட்ட சின்ன விடியலைப் போல்
கண்ணீரைத் துடைத்திடவே வந்தமரும் வைகறை
கவலைகள் நீங்கிடவே தந்திடும் மகிழ்வு
திகைப்புகள் அகன்றிடவே தந்திட்ட பட்டொளி

பெருந்துயர் துடைத்திடவே மனதில் இப்போ
பெயர்ந்து வரும் அலைபோன்ற காற்றிது.
நினைவுகள் யாவற்றையும் வாழ்வில் இப்போ
நிஜமாக்க வந்திட்ட செழுமை காலமிது.
வாழ்வினை மாற்றிட வந்திட்ட பொழுது இது.

நிதானமற்ற உம் வாழ்வை மாற்றிடவே
நிகரற்ற பெருவாழ்வை உமக்கு தந்திடவே
நெடுந்தூரம் பயணமாய் வந்திருக்கும் ஒளியிது.
நெஞ்சங்கள் மகிழ்ந்திட வந்திட்ட ஊற்றிது.
உம் வாழ்வை மாற்றவந்த வைகறைப்பொழுது இது.

துன்பக் கேணியை அகற்றி உம்மை
துடித்திடும் கடிகாரம் போல் மாற்றிட
தவித்திடும் சேயுள்ளம் போல் தளர்ந்திட்ட

உங்கள் சிறுவாழ்வை மாற்றிட விரைந்து
மதகோரம் காத்திருக்கும் இந்தப் பொழுது.

காரிருளில் கலந்திட்ட நகரம் போல்
காலமெல்லாம் வாடிநிற்கும் என் உறவே உன்
கரங்களை திடப்படுத்த வந்திடும் பொழுதிது
தொலைந்துவிட்ட தொன்மை கால சிற்பமே
தொலைதூரம் தேடிவரும் விடியலிது உனைமீட்க.

அரணான பட்டணம் போல் தோன்றி
அலங்கோலமான பட்டணமாய் மாறிவிட்ட உறவுகளே உம்
அதிர்ச்சிகளை நீக்கிடவே வந்திடும் வெளிச்சம்
அமைதியை கொடுத்திட தந்திடும் பேரொளி
கவலைகள் மறந்திடுங்கள் வந்திட்ட விடியலினால்.

அழகான அம்புயத்தை மலர வைக்கும் நல்ல நல்ல
அருணோதயம் போலவே வந்திட்ட பொழுதிது
பக்குவமாய் உம்மை மீட்டிடவே இன்று
பரிதவிக்கும் தாய் போல வந்துவிட்ட நேரமிது
பக்குவமாய் தந்திடும் மகிழ்வே இவ்வைகறை.

## பாடிப்பறந்த குயில்

கதிரோனின் ஒளி காண விரைந்து அன்று
காலனவன் நிலவொளியால் சிரித்து நான்
சிகரம் தொட்ட சின்னக் கால்கள்!
துடிப்புடன் திரிந்திட்ட துடிப்பான நாட்கள்
துயரங்கள் இல்லாத துணிவுடன் அலைந்திட்ட
சின்னச்சின்ன சிங்காரமான பாதங்கள்

பள்ளியிலே பல பாடங்கள் விருப்புடனே நான்
பகலொளியில் படித்திட்ட பண்பான காலம்
சண்டை போட்டு அனுதினமும் நாங்கள்
சவால்களுடன் எல்லைகளைத் தாண்டி வந்தோம்
பக்குவமாய் பள்ளியிலே கற்றிட்ட நாட்களது.

விருப்புகள் இல்லாத போதும் நான்
விருப்பமுடன் கற்பது போல் நடித்திட்ட அந்த
விபரம் சொல்ல முடியாத தூய நாட்கள்
சொல்லிக் கொடுத்த பாடங்களை தினமும்
தொல்லையுடன் கற்றிட்ட சொர்க்க வாழ்வு.

பள்ளிப் பட்டாம் பூச்சிகள் போல் நாம்
தரணியிலே பாடித்திரிந்த நாட்கள்
தொலைவினிலே கண்ட மரத்தால் நாம்
தடுமாறிப் போன தடுமாற்றப் பயங்கள்
தயவுடனே தாண்டி வந்த சின்ன வாழ்வு

தினமும் புலரும் தினகரனின் ஒளி போன்று
தீராத மகிழ்வுடன் திண்டாட்டம் போட்ட அந்த
நல்ல நாட்களை தினமும் எண்ணி
நகருகிறேன் நான் இப்போது வாழ்வில்
நல்ல நண்பர்களின் தீராத பிரிவினால்.

துயரம் மறந்து துள்ளித் திரிந்த நாட்கள்
தூங்கிடக்கூட முடியாத நட்பின் சிகரங்கள்
தத்தளிக்கும் தடாகம் போன்ற சிரிப்புடன்
தலையாட்டித் திரிந்த செழுமையான காலம்
வாடிய மல்லிகையாய் மாறியது ஏனோ.

வாடாத மல்லிகையின் வயல் வெளியில் - அந்த
வண்ணமான செழுமையுடன் வாழ்ந்த நான்
தொலைந்து போன காகிதத்தை தேடுவது போல்
தொடர்ந்து தேடுகிறேன் எனது நட்பை
தொலைதூரம் சென்று விட்ட நட்பினை.

எல்லையில்லாத நண்பர்களின் பாசம்
எதிலும் சாதனை படைத்திடும் நேசம்
ஏது இந்த வாழ்வென சொல்லவைத்து விட்டதே
ஏக்க மனதை ஏன் எனக்கு தந்தது.
ஏமாற்றி விட்ட என் நட்பு.

நூறு தடைவ சண்டை போடும் - எம்
நூற்றாண்டு கடந்தது போன்ற உறவு
சாந்தமுடன் வாழ்ந்திட்ட நாம் இப்போ
சாகசமாய் பிரிந்திட்ட காரணம் என்ன என
எனதுள்ளம் பரிதவிக்கும் காரணம் என்ன நட்புதானோ.

துக்கமில்லாமல் நாம் துடித்திட்ட வாழ்வு
தூண்களாக நாம் அன்று திரிந்திட்ட ஜீவியம்
தர்க்கங்கள் இல்லாத தயவான நாட்கள்
தாண்டி விட்ட தியாகமான வாழ்வு
தீராத கவலையாக மாறிவிட்டது இப்போது

தளர்வுகள் இல்லாத சரியான நாட்கள்
தயவுடன் இளைப்பாற்றிய பாடசாலை மாமரம்
திறன்பட வாழ்ந்திட்டஅன்பான நாட்கள்
திகைப்புகள் இல்லாமல் வாழ்ந்திட்ட நாம்
தீராத பிரிவுடன் வாழ்வது ஏன்.

தொலைந்து போன பேனா தேடி
தொடுகையை உணரும் உள்ளம் தேடி
திறந்திடும் அன்பான இதயம் நாடி
தீவிரமாய் புறப்படுகிறேன் நட்பை காண
பறந்து சென்றது அந்தப் பாசம்

திகைப்புகள் இல்லாமல் வளர்ந்த நட்பு
திகைப்புடன் இன்று வாடுவது ஏன்
தளர்வுகள் இல்லாத தாக இதயம்
தவிப்புடன் இன்று மாறியது ஏன்
இத்தனையும் தந்தது இந்த நட்பு தானே.

## வாழ்க்கையின் வசந்தங்கள்

அழகான அரண்மனையில் வாழ்வது போல்
ஆழமான உறவுகளுடன் வாழ்ந்த வாழ்வு
சின்னப் பட்டாம் பூச்சிகள் நாம் என்று
சிங்கார நடை போட்ட சில காலம் அது

சின்னப் பள்ளிக்கூடமதில் நாம் அன்று
சித்திரம் கீறிய அந்த வசந்தகாலம்
தீராத விளையாட்டுப் பிள்ளைகளாய் நாம்
தித்திப்பு போட்ட சுதந்திர காலம்

அம்மாவின் சொல் கேட்டு அன்று நாம்
அமைதியுடன் சொர்க்கம் கண்ட நாள்
துள்ளாத மனசும் அன்று துள்ளியதே
தூதர்கூட்டம் கூட அன்று பாடியதே

கள்ள உள்ளமில்லாத வாழ்வு
காயங்கள் இல்லாத பற்பல மொழிகள்
துள்ளித் திரிந்து குதித்திட்ட கும்மாளம்
தாகம் தீர்த்திட்ட பாடசாலைத் தடாகம்

போட்டி போட்டு படித்திட்ட பாடங்கள்
பொறாமை கொள்ளாத பொன் மனங்கள்
எல்லையில்லாத ஏற்றங்கள் அன்று
ஏக்க மனதுடன் படித்திடும் பாடங்கள்.

சினக்க வைக்கும் எனது நண்பி
சீக்கிரத்தில் மறந்துவிட்ட அவள் கோபம்
சுதந்திரப் பறவைபோல் பாடிடும் குயில்களாய் - நாம்
சாந்தமாய் ஆடித்திரிந்த சகஜமான வாழ்வு.

வேற்றுமை இல்லாத எனது நண்பர்கள்
வெறுத்திடாத அன்பு ஆசான்கள் சிலர்
தீபம் போன்று எரிந்திட்ட சுடரொளியாய் - நாம்
தினமும் திண்டாட்டம் கொண்ட அன்பினெல்லைகள்

விடுமுறை நாட்கள் என்றால் விடுதலை இல்லை
வீறு கொண்டு வந்திடுவோம் விடுமுறை வகுப்பிற்கு
அருமையான அரவணைப்பை அள்ளி அளிக்கும்
அன்பான நண்பியினை காணச் செல்வேன்.

உள்ளத்தை உருக வைக்கும் உந்தன் உண்மை என
உற்சாக மனமுடன் நான் கூறிவிட்டேன்
கதாபாத்திரமாய் நீ நடக்க வேண்டுமென
கனிவுடனே நான் கண்டித்துக் கொண்டேன்.

பதற்றமில்லாத பரிமளமான பாச உறவு அவள்
பாதுகாக்கும் அன்னையை விட பெரியவள்
சின்னக் கால்கள் கொண்டு ஓடோடி வருவாள் - என்னை
சிரிக்க வைத்திடும் பள்ளி உறவு நண்பி

## தமிழ் இன்பத்தமிழ்

தொன்மைக் காலம் கொண்டு செயல் வீரம் படைத்து
தொலைதூரம் சாட்சி பெற்ற தமிழே!
காலத்தை வென்ற கானங்கள் படைத்து
காலமதை வென்றிட்ட இன்பத் தமிழே! நின்
இன்பச்சான்று பகிர்ந்திடுகிறேன் வாழ்க!

உன் இனிமையான ஊற்று பாய்ந்திட
உன் கனிவான காலங்கள் செழித்திட
உலகிற்கு உனதொளி மிளிர்ந்திட என்றும்

உளமார வாழ்த்துகிறேன் வாழ்க தமிழே!
கனிவுடன் உன் இன்பம் மலரட்டும்.

உதயம் போன்று உதித்திட்ட ஒளியே
உலகிற்கு வழிகாட்டும் நிலையான நிழலே
பலகாலம் பாரினிலே உலாவரும் நிலவே
புலர்ந்திடும் காலை இன்பம் போன்ற கதிரோனே உன்
இதமான பயணம் தொடரட்டும் தமிழே!

நிலவாக நீநின்று வழிகாட்டும் போது உன்
நிஜமான உறவை எண்ணி தவித்திடும் மனது
நகர்ந்திடும் பயணத்தில் நனவாகும் கனவு என
நாளாந்தம் வழிகாட்டும் இன்பக்கனியே நீ
நலமுடனே தொடர்ந்திட வாழ்த்துகிறேன் தமிழே!

தித்திப்பு தந்திட்ட இனிமையான தேனே நீ
தீராத ஊற்றுடையவளாய் வாழ்வது தான் எப்படி
உனது பாதம் பணிகிறேன் இப்போ நான்
உனது கரம் பிடிக்கிறேன் இப்போ
என்றென்றும் செழித்திடுவாய் இன்பத்தமிழே!

உன் கவி பாட கனிவுடனே வருகிறேன்
உதித்திடு நீ என் உளமதிலே இப்போது
நாளிகைகள் போதாது உன் வார்த்தை சொல்ல
நான் நாடுகிறேன் அனுதினமும் உனையே
என்றென்றும் வாழ்த்துகிறேன் இன்பத்தமிழே!

பர்வதத்தில் ஏறிவிட்ட உன் பாதங்கள்
பக்குவமாய் காலூன்றி நிற்பது எப்படி
அசைத்திடவே முடியவில்லை உன்னை இப்போது
அசையா மரமாய் நிலைத்திருக்கும் தமிழே
என்றென்றும் கனிவுடன் வாழ்க தமிழே!

நிலையான நின்மதி தந்திடும் சுடரே
நிர்க்கதி இல்லாத உனதருமை பேச்சு
சுவைத்திடத்தான் தெவிட்டவில்லை உன் வரிகள்
சுமையாகத் தெரியவில்லை உனதருமை கனவுகள்
என்றென்றும் எனை வாழ வைத்த இன்பத்தமிழே!

## துன்பக் கேணி

அல்லல் பட்டு அழிந்து போகிறது இதயம்
ஆறாத்துயர் கண்டு அலைகிறேன் இப்போ
கண்களிற்கு இங்கு உறக்கம் இல்லை என்
கல்லறையும் வந்திடுதில்லை என் அருகிலே.

பதற்றப்பட்டு துடிச்சுப்போச்சு மனசு
பழகக்கூட நல்ல நண்பர்கள் இல்லாததால்
சீற்றம் கொண்ட உறவுகளின் புயலால் - நான்
சிதறிப் போனேன் பாவத்தின் உலகினில்

எழுந்திட துடிக்கிறேன் குகையை விட்டு
எழுந்திட முடியவில்லை கூனிப் போனேன்
கண்களிற்கு விடிவில்லை இப்போது எனக்கு
கண்ணீர்கள் இல்லாத நொடியில்லை வாழ்வில்

தொல்லை தாங்க முடியாமல் கூனிப் போனேன்
தொட்டிட முடியவில்லை வாழ்வின் வசந்தத்தை
அனாதையாய் அவலப்பட்டு அடிமையானேன்
ஆவேச அந்தகாரம் எனை மூடும் போது

துடித்து துடித்து திகைத்துப் போனேன்
துளிர்க்காத என் வசந்தத்தைப் பார்த்து
இளைப்பாற இடமின்றி இடறிப் போனேன்
இன்னல்கள் பல கண்டு அதிர்ந்து போனேன்.

அன்புக் கதைகூற அம்மாவும் இல்லை
ஆட்டம் போட்டிட அக்காவும் இல்லை
கற்றதை சொல்லித் தந்திட அன்புக்
கதைகூறும் அண்ணனும் இல்லை அருகினிலே.

துணையுடனே எனதருகில் எப்போதும் நடந்திட
தூய்மையான அன்பு காட்டிடும் உறவில்லை
நகர்ந்திட முடியாமல் தவித்துப் போனேன்
நாளாந்தம் நானுமிங்கே வாடிப்போனேன்.

துணையாக வந்திட்ட நண்பியும் இல்லை
துயரத்தை நீக்கிவிட்ட கிளிக்குஞ்சும் இல்லை
நிழலாக மாறிவிட்ட இலவமரம் இல்லை
நிர்கதியாய் மாறிவிட்ட துயரம் மட்டும் என்னுடன்.

அனுதினமும் களைப்பாற்றும் ஆலமரம் எங்கே என்
அவலங்கள் தினம்கூறும் அருவியும் எங்கே
அனுதினமும் இதயத்தை குற்றும் முட்கள் - அது
செல்போன்று அரிக்கின்றது சின்ன மனதை இப்போ.

சிறகுடைந்த பறவைபோல் எனது கதி இப்போ
சீராட்ட யாருமின்றி தவிக்கிறது மனசு
அனுதினமும் தவறாமல் மூழ்கித் தவிக்கிறேன்
அன்றாடம் என்வாழ்வில் துன்பக் கேணியில்.

## சுனாமி தந்த சோகம்

அழகுடன் பாடித்திரிந்த அந்தக் கடற்கரையில்
அமைதியுடன் நடந்திட்ட அன்றாட வாழ்வு
களிப்புடன் திரிந்திட்ட எம் வாழ்வு
கண்ணாடி போன்ற வாழ்வு போல் - இன்று
உடைந்துபோன காரணம் கடல் தானோ?

அன்பாக அணைத்திட்ட தந்தை எங்கே
அழகாக இரசித்திட்ட அண்ணா எங்கே என
அனுதினமும் வேதனைப்பட வைக்கும் சோகம்
தயவு காட்டி அணைத்திட்ட கடல் அன்னை
தனிமையாக என்னை விட்டது ஏனோ?

கால்கள் பதித்து வினையாடிய முற்றவெளி
கனவுகள் கண்டது போல் மறைந்ததுவே
தோள் கொடுத்து தாங்கிய தோழமைக் கடல்
தொலைதூரம் எம்மை தொலைத்துவிட்ட - இந்த
சோகமயம் ஏன் எம் வாழ்வில் இப்போது

அன்றாடம் உன் மடியில் எமைத்தாங்கி சுமந்திட்ட
அழகான என்உளம் நிறைந்த கடலே
அகோரம் கொண்டவள் போல் நீயும்
ஆவேசம் கொண்டெழுந்த காரணம் என்ன
எமக்காக கொடுத்திட்ட பரிசிதுவோ அன்னையே

பகலிரவு பாராமல் பாரத்தை சுமந்திட்ட எம்
சுமையான எழிலுற்ற அன்புக்கடலே
பொங்கி எழுந்திடும் புயல் போல் நீ
பொறுமையுற்று எழுந்து ஏன் மாறினாய்
புகழ்ந்திட்ட பூம்புயலே நீ தந்தது சோகமே

உறவிழந்து கிடக்கும் எம் வாழ்வு
உணர்வற்றவழாய் எதுவரைக்கும் நீயிருப்பாய் கடலே
சுமை தாங்கி நீயின்று சுமை தந்தாய்
சதாகாலமும் சான்றுடன் வாழ்ந்த நீ
சற்று நிமிடத்தில் தந்திட்ட சுமை இதுவோ

நிலையாக தந்திட்ட சோகவாழ்வு
நிஜமாக நம்ப முடியவில்லை என்னால்
நகர்வுகள் கொடுத்திட்ட தாயா நீ? என
சொல்ல வைத்த காரணம் என்ன

ஊரிழந்து உறவிழந்து தவிக்குது மனசு
உள்ளமெல்லாம் கரும்புகையாய் நிறையுது இன்று எனை
தவமிருந்து பெற்றிட்ட அன்னை கூட இல்லை
தியாகம் இதுதானா அன்புக்கடலே
தூரதேசம் எமை வெறுத்தொதுக்கிய கடலே
நீ கொடுத்த சோகம் இதுதானா கடலே.

## வெண்ணிலவே

விரைந்து என்னையும் கண்டிட வாசல் வந்திடும்
வசந்தம் தந்திட எனதருகில் தினம் விரைந்திடும்
புதுக்கவிதை தினம் படிக்க வெளிச்சம் தந்திடும்
பூரிப்புக்கொண்டு எழுந்து வரும் வெண்ணிலவே....

அந்திப் பொழுதினிலே அலை அலையாய் உன்இனிமை
ஆர்ப்பரிப்பு என்மனதில் தந்தது ஏனோ
நினைக்க மறந்த வேளையில் உன் ஒளியால் - என்
நினைவினை திசைதிருப்பிடும் அன்பான வெண்ணிலவே....

காலத்தை வென்று தினம் காவியம் படைத்திடுவாய்
கானகம் சென்று உன் கனிவுமுகம் காட்டிடுவாய்
கோலங்கள் பலவற்றை உன் வதனத்தால் மிளிரவைப்பாய்
கோமகனே என் உள்ளம் தொட்ட வெண்நிலவே....

அன்பான உனது முகம் பார்த்து மகிழ்கிறேன்
ஆகாயம் தினம் பார்த்து உனக்காக ஏங்குகிறேன்
துள்ளிட வைக்கும் நிமிடமதை நாடி தவிக்கிறேன்.
துன்பத்தை மறந்திட தினம் தேடுகிறேன் வெண்நிலவே....

அழகான முற்றத்திலே அன்பு நடை போட்டிடுவேன்
அன்னையே விட்டு வந்து உன்னுடனே அலைந்திடுவேன்
சித்திரங்கள் கீறி தினம் சிகரம் தொட்டிடுவேன்
சிங்காரமான உன் முகம் கண்டு வெண்நிலவே....

தத்தளிக்கும் நினைவுகளை தினம் எனக்குள் தந்திடுவாய்
தாமதிக்க வைத்து தினம் என்மனதை கவர்ந்திடுவாய்
அழகான பனியினையும் அசத்தியே மகிழ்வாய் நீ
அன்றாடம் என் வாழ்வில் வந்திடுவாய் வெண்நிலவே....

சின்ன வயதினிலே அம்மாவுடன் அன்று நான்
சிரித்து மகிழ்ந்திட்ட வினாடிகள் என் முன்னே
சிற்பம் போல் நிற்கின்றது உன் ஒளியால்
சிகரத்தை தொட்டு விடும் நினைவுகள் உனதொளியால்....

ஆகாயமதிலே அழகான காட்சி தரும் சுடரோனே!
அகமகிழ்ந்து உனை காண தினம் காத்திருக்கின்றேன்.
தென்றலில் பவனி வரும் எனதருமை தோழனே!
தேன்மதுரத் தாலாட்டு எனக்காக பாடிடும் வெண்ணிலவே....

நிலாச்சோறு ஊட்டிய என் தாயின் நினைவும்
நிலவொளியால் பாடம் படித்த பரீட்சை நாட்களும்
தித்திப்புடன் உலாவந்த அழகான முற்ற வெளியும்
திரைப்படம் போல் தோன்றுகிறது உன்னால் வெண்நிலவே....

அன்றாடம் என்னை அரவணைக்கும் என் வெண்நிலவே
அமைதியுடன் உன்னை கண்டிட நான் துடிக்கின்றேன்.
அந்திநேரப் பொழுதிற்காய் தினமும் காத்து கிடக்கின்றேன்
அமைதியினை கொடுத்து விரைந்து வா வெண்நிலவே....

## முடிவில்லாத பயணங்கள்

கையினிலே எழுத்தாணி கொண்டு மனதினிலே நினைவுகள் - பல
கனவுடனே சுமந்து தொடர்கின்றேன் என் பயணத்தை
வாழ்க்கைச் சுவட்டிலே புரட்ட முடியாத பல பக்கங்களை
வலிமை கொண்டு புரட்டிட தான் எழுகிறேன் முடியவில்லை
தாகம் கொண்டு எழுகிறேன் பயணம் தொடர
தலைநகரம் காணாமல் சோர்கிறது பயணக்கால்கள்

முற்றுப்புள்ளியினை தினம் தேடி அலைகிறேன்
முற்றுப்பெறாத வாழ்க்கைக் கதைகளின் துடிப்பால்
இளைத்துப் போனேன் இப்போ நான் இங்கு
இதயத்தைக் களற்றி இளைப்பாற துடிக்கிறது சிந்தை
திகைத்துப்போய் திணறிப்போன நிமிடங்கள்
தூரப்பயணத்தால் மடிந்து போகிறது வாழ்வு

நித்திய காலமாக போகின்ற பயணம் இது
நிந்தைகள் நிறைந்த நிறைவற்ற சோக வாழ்வு
துரிதமுடன் பயணிக்க துணிவும் இல்லை எனக்கு
துடிக்கிறது உள்ளமது தூரப்பணயத்தால் இப்போ
துவண்டு போகிறது இதயம் குற்றுகிறது அம்புகள்
தளர்வுகள் சுமந்து தொடர்கிறேன் முடிவிலாப் பயணத்தை

முற்றுப்பெறாத முகவரிகள் இல்லாத ஜீவியம்
முடிவுகள் இல்லாமல் முடிகிறது என் வாழ்வு
தட்டிப்பறித்திட துடிக்கிறேன் ஜீவ எல்லையை
தாண்டிட முடியாமல் தடுக்கிறது வாழ்க்கை மதில்கள்
சத்துவம் இல்லாமல் உயிரிழந்து போகிறது வாழ்வு
சத்துவம் அழித்திட துடிக்கிறது மௌனமாக லப்டப்

உடைந்து போன கடிகாரத்தை பொருத்திட துடிப்பது போல்
உடைந்து போன வாழ்க்கையை நாடி தொடருகிறேன்
மாயமான கண்ணாடியைப் பொருத்த முடியாமல் நான்
மனமடிவாகி நிற்கிறேன் மௌனமாக சில நிமிடங்கள்
கால்கள் விடுகுதில்லை இளைப்பாறி அமர்ந்திட என்னை
கற்பனையை சுமந்து தொடர்கிறேன் முடிவில்லாப் பயணத்தை

பயணக் களைப்பால் பாறைகளின் தையலால் என்
பாதம் கூட வடிக்கிறது இரத்தக் கண்ணீரை
பாதைகள் தெரியாமல் பயணம் தொடர்கிறேன் நான்
பகலிரவு தெரியாமல் நாடுகிறேன் வாழ்வின் எல்லையை
தேடலின் முடிவை உணர்ந்திட முடியலையா? இல்லை
தேடலின் முடிவை நான் கண்டிடவில்லை இப்போ

தேற்றிட மானிடரில்லா வனாந்திர வாழ்வு இது
தேகமெல்லாம் கொதிக்கிறது பகலின் உஷ்ண வடிவால்
என் நிலைகூட தெரியலையா உனக்கு என
நித்தமும் திட்டுகிறேன் அந்தப் பாலைவன இருளுக்கு
பாதணியில்லாமல் சுடுகிறது கால்கள் எனக்கு

பாதையும் தெரியாமல் இருள்கிறது கண்கள் இப்போ

முடிவினைத் தேடி தொடருகிறேன் பயணம் நான்
முடிவு கண்டிட இளைத்துப்போய் நாடுகிறேன்
முற்றுப் பெற்றிட விரைந்து செல்கிறேன் ஆவலுடன்
முகமலர்வு இல்லாமல் தவித்துக் கிடக்கிறேன் நான்
தேடலின் முடிவு தேடி அலைகிறது மனசு
தொடர்ந்து போகிறேன் மறுபடியும் முடிவில்லாப் பயணம்.

## கற்பனைக் கனவுகள்

நினைவுகளின் நிரந்தரமாய் அழகான கனவுகள்
நித்திய காலமாக கற்பனைக் கனவுகள்
திகைத்துப்போய் விட்ட நினைவின் இருப்பிடம்
திணறிப் போய் விட்ட கற்பனைச் சின்னங்கள்
சித்தரிக்கப் பார்க்கிறேன் வெளியரங்கமாய் இப்போது

தேடிப்போன கனவுகளின் வெண்புறா
தேடலை அறிந்திட்ட தெய்வக் குணங்கள்
தாலாட்டுப்பாடி வந்த தாயாக என் நண்பி
தயவுடன் அணைத்திடும் கற்பனைத் தாயவள்
தியாகம் கொண்டு எழுந்திடும் வேர் அவள்

தூய்மை கொண்டிடும் மனது சில நிமிடம்
துணையைத்தேடியே பறந்திடும் வெண்புறா போல்
தாயைத் தேடியே பறந்திடும் பறவை நான்
திகைப்புகள் இல்லாமல் பறந்திடும் பறவையாய் - நான்
கனவிலே பறந்திட்ட நாட்கள் அது

அள்ளியே அணைத்திடும் அன்பான மழலை போல்
அச்சமில்லாமல் துணிவுடன் நடந்திட்டேன்
வெட்கங்கள் மறந்திட்டு வெளியிலே பறந்திட்டேன்
வேதனைகள் இல்லாத சுயாதீனப் பேதையாக
கனவிலே அனுதினமும் சிகரத்தை முட்டிவிட்ட கற்பனை.

சின்ன வயதினிலே திண்டாட்டம் போட்டிட்ட நான்
சகஜமான நாட்களினை எண்ணிப் பார்த்தேன்
அம்புலி மாமாவுடன் அழகான இராத்திரியில் நான்
அலைந்திட்ட முற்றத்தை நினைவில் கொண்டேன்
மறந்திட முடியவில்லை கற்பனைக் கனவுகளை

பகலிரவு என்றிடாமல் பாப்பா பாட்டு பாடிட்டேன்

பக்கமாய் இருந்திட்ட அன்பான தந்தையுடன்
புயலடிக்கும் வேளையிலே பூரிப்புக் கொண்டேன்
புரிதவிக்கும் நண்பர்களை மறந்தே போனேன்
உலகம் தெரியாத சின்ன வயதின் கற்பனையில்

அழகான ஆசான் போல் நடந்திட்டேன் கனவில்
அகமகிழ்ந்து சிரித்திட்டேன் அக்கற்பனை கனவில்
சின்ன மழலைக்கு கொடுத்திட்டேன் பாடங்கள்
சிரித்துப் பேசியே விளங்க வைத்தேன் கனவில்
துள்ளிப் போன நிமிடமான கற்பனையால்

அழகான மேடையிலே அழகுடன் நிற்பது போல்
அமைதியான கனவுடனே களித்திட்ட இராப்பொழுது
வாடாப்பூ மல்லிகை போல் வாசம் வீசிட்டேன்
வண்ண மலர் போல் சிரித்திட்டேன் வசந்தத்தில்
இத்தனையும் நிஜமல்ல அனதினமும் கண்டிட்ட கற்பனைக்
கனவுகள்.

## பூங்காற்று

புலர்கின்ற வேளையிலே என் காதோரம் வரும்
புத்துயிரை அனுதினமும் என் மனதில் தந்திடும்
திகைப்புகள் அனுதினமும் நீக்க வந்திடும் பூங்காற்றே
தீராத தித்திப்பு கொடுத்திடும் அழகிய தேன்காற்றே!

கவலைகள் மனதில் இல்லாது துடைத்திடும் ஊற்றே
காவியம் படைத்திட வந்திடும் என் மூச்சே
துணையாக தினம் தேடி வந்திடும் உதயமே
துன்பத்தை தொலைத்திடும் என் இனிய பூங்காற்றே!

மனதினை தினம் வருடி இன்பம் தருவாய்
மூச்சிலே தினம் கலந்து முத்தம் செய்வாய்
காரிருளை தினம் தேடி வெண்மை செய்வாய்
கனிவான ஒளி தந்திடும் இனிய பூங்காற்றே!

துன்பத்தின் வைகறையை தொலைக்கும் இனிய ஒளியே
தூக்கத்தை இன்பமாக்கும் இனிமையான தென்றல் காற்றே
தனிமையை போக்கிடும் தயாபர மங்கை நீயே
தாகம் தீர்த்திடும் இனிமையான புனிதக்காற்றே!

தித்திப்பு தினம் தந்திடுவாய் என் மனதில்
தீராத வேதனை தினம் தீர்த்திடுவாய் உள்ளத்தில்

கரடான வாழ்வை செவ்வையாக மாற்றிடுவாய் தினமும்
கண்ணீரை துடைத்து வசந்தம் தந்திடுவாய் பூங்காற்றே!

புனிதமான எண்ணங்கள் தந்திடுவாய் தினம் என்னில்
பூத்திடும் புதுப்பெலனை கொடுத்திடுவாய் மனதில்
நினைவுகளை மூட்ட வைத்து நின்மதி அடைவாய்
நிகரில்லா எண்ணங்கள் தந்திடுவாய் பூங்காற்றே!

இரசிக்க வைத்திடும் உன் இனிய சாரல்
இனிமையாக மாற்றிடும் உன் இதமான தூறல்
இன்னலை மறக்க வைக்கும் எளிமையான வருடல்
இதமான தென்றலாக வருடிடும் உனது வேகம்

திரைச் சேலைகளை கிழித்து தினம் என்னை
தினகரனைத் தொட்டிடும் தூரத்தில் நிறுத்திடும் காற்றே
தனர்வுகளை பறித்து தினம் தன்னிறைவு தந்திடுவாய்
தாகத்தை தினமும் தீர்த்திட விரைந்திடும் பூங்காற்றே!

களைப்பினை தினம் அகற்ற காதோரம் வந்திடுவாய்
கானங்கள் பல பாடி கற்பனைகள் தந்திடுவாய்
துணையாக தினம் எனைத்தேடி வந்திடுவாய்
தூய்மையை தினமும் துணையாகத் தந்திடும் பூங்காற்றே!

புனிதமான என் உள்ளம் தொட்ட உறவே
பூவுலகில் உன் மகிமை மிளிர்ந்திடுதே தென்றலே
காதோரம் செய்திகள் கூறிட வந்திடும் காற்றே
கலக்கமில்லா உன் வருடல் போதுமடி பூங்காற்றே!

## சொல்மறந்த கதை

சொல்லென உந்த தள்ளுகிறது மனம் இப்போது
சொல்லிட முடியாமல் திகைத்துக் கொண்டிருக்கின்றேன்
சோக வாழ்விலே வந்திட்ட ஆறாத்துயர்களை
சோகக்கதைகளை சொல்லிடத் துடிக்கின்றேன் நான்
அல்லல் கண்டு அமைதியிழந்த வாழ்வினை
அகதியாய் அலைந்து பட்ட பெரும் துயரை

தாகம் தீர்க்கக்கூட நல்ல தடாகம் இல்லை
தங்கித் தரித்திட நல்ல குடிசையும் இல்லை
கண்களை மூடி கொஞ்சம் உறங்கிட தலையணை இல்லை
கண்ணீர்கள் மட்டும் போதுமாய் அப்போது எம்மிடம்

விற்றிடக் கேட்டால் உழைத்திருக்கலாம் என்று எண்ணுகிறேன்
விடியல் இல்லாத அந்த வாழ்வினை எண்ணி

சொல்ல முடியாமல் இருக்கிறது இப்போ எனக்கு
சொல்லிட எண்ணித்தான் தொடருகிறேன் இந்தக் கவியை
எண்ணி எண்ணி வாடிப்போனதால் - நான்
எதுவும் கூறிடாமல் இருந்திட முடியாது இனியும்
சொல்ல மறந்திட்ட ஒரு சோகக் கதையை
சொல்லித் துடிக்கிறேன் ஏமாறும் அந்த நாளினை

திகைத்துப் போய் பதுங்கு குழியிலே நாம்
தினமும் அச்சமுடன் வாழ்ந்த காலங்கள் அவை
கருமையான பொழுதுகளால் வாழ்வு சோகக்காலமாய்
கண்டிடாத இரத்த ஆறில்லை அவ்வளவாய் துயர்
உண்ண உணவின்றி இறந்து உயிர்த்த பொழுது
உண்மையை கூறுகிறேன் இந்த சொல்ல மறந்த கதையை

ஆதரவு இல்லாமல் அக்கினியில் கால்கள் வைத்து
அமைதியில்லாமல் தண்ணீரில் மூழ்கி தினம்
அவலம் கொண்டு குருதியில் முழுகி நாம்
அன்றாடம் வாழ்ந்த அச்சம் நிறைந்த ஜீவியம்
நினைவுகள் இப்போ படமாக என் கண் முன்
நிச்சயமாக கூறுகிறேன் சொல்ல மறந்த கதையிது

மூலிகை என எண்ணி முற்றத்தில் கிடந்த
முற்றான விசம் நிறைந்த அடம்பனை உண்டு
நம் அன்பான சகோதரர் மரித்த அந்த நாட்கள்
அவசரமாய் அனுமதிக்க வைத்தியசாலை இல்லாமல்
அன்றாடம் கண்ணீர் விட்ட கணப்பொழுதுகள்
அமைதியில்லாமல் நடந்த அகோர நாளிகைகள்

சொல்லிட முடியாமல் தவிக்கிறது மனசு இப்போது
சொல்லிடத்தான் வேண்டுமென தவிக்கிறது உள்ளம்
உண்மையுடன் கூறுகிறேன் எம் அவல வாழ்வை
உதயம் இல்லாமல் தவித்திட்ட உடைந்த வாழ்வினை
கூறுகிறேன் இப்போது கவனமாய் கேளுங்கள் - நான்
கூடின்றி தவித்த சொல்ல மறந்திட்ட கதையினை

வெயிலின் அகோரத்தால் வெறுத்திட்ட அந்த நொடிகள்
வென்றிட முடியாமல் திகைத்த பொல்லாத காலம்
உறவிழந்து தவித்து உதவியற்ற அந்த வாழ்வு
உணர்வுகளைத் தூண்டிய பேரிரைச்சலான அகோர நெருப்பு

திகைப்புடன் வாழ்ந்த சோதனைக்காலம் அது
தினமும் பட்ட துயரை சொல்லுகிறேன் சொல்ல மறந்த
கதையை

## மரணித்த மானிடம்

பாசஉறவுகளை தேடிடும் பூவுலக மானிடமே
பரிதவிக்கும் சகோதரரை எண்ணிப் பார்க்கவில்லையா
இரக்கம் கொண்ட அன்பான மானிடமே நீ
இரக்கம் இல்லாமல் நிற்பதன் காரணமேன்
சொல்லாத குணத்துடன் மாறிப்போனதுமேன்

இரத்த ஆறோடும் அவலத்தைக் கொண்டாயே
இதயம் மாறிப்போய் விகாரமாய் மாறினாயே
உயிரோட்டம் கொண்ட மனதில் உண்மைகள்
உயிரற்றுப்போய் இறந்தது ஏனிப்போ
துடிப்பற்ற இதயமான வேசமான மானிடமே

துவண்டிடும் கனவுகள் நெஞ்சில் சுமந்து
தூய்மையான மனதுடன் ஜீவித்த மனுக்குலமே
மாண்டுபோய் விட்ட மனது ஏன் உனக்கு
மதியாத காலணிபோல் மாறியதேன் உனதுள்ளம்
காட்டிக் கொடுக்கும் மானிடமாய் மாறினாயே

சகோதரர்க்காய் குருதியீனும் தெய்வக்குலமாக அன்று
சான்று பெற்றாய் நீ இந்த பூவுலகில்
சகோதரனை பலியாக்கும் அன்பற்ற குலமாக - இன்று
சான்று பெறுகிறாயே ஈனமற்ற மானிடமே உன்
மனதின் குணங்கள் மாறியது ஏன் இன்று

உலகிற்கு உயிர் கொடுத்தாய் அன்று நீ
உலகத்தை அரிக்கின்றாய் நீயின்று துன்மார்க்கராய்
நிலையற்ற உலக வாழ்வை நீதியுடன் வாழ்ந்திட
நிஜமான நெஞ்சமதை பெற்றிடு மறுபடியும் - உன்
நிலைமாறிப்போகும் காலமது வேண்டாம்

ஒற்றுமையாக ஓங்கி வளர்ந்திட்ட கேதுரு மரமே
ஒருமனம் இன்று இருமனமாய் மாறியது ஏன்
குலப்பண்பை மறந்து துளிர்வற்று கிடக்கின்றாய்
குருதியாய் மாறிப்போய் கிடக்கின்றாய் இப்போது
ஒளியகன்ற இருள்விளக்கான மரணித்த மானிடமே

துணிவுடன் நீயன்று நிமிர்ந்து நின்றாய்
துக்கங்கள் சுமந்து கிடக்கின்றாய் இன்று
தர்க்கங்கள் உளமதில் சுமந்து கிடக்கின்றாய்
தயவின்றி வாழ்கின்றாய் தியாக மனமிழந்து
மாறிப்போன நிரந்தரமற்ற மரணித்த மானிடமே

இரத்தப்பழி சுமந்து இருக்கின்றாய் உலகில்
இருதய உண்மை இன்றி கிடக்கின்றாய் உலகில்
சேற்றிலே புதையுண்ட பிளிறு போல் நீயின்று
சொந்தக் காலினிலே நிற்கமுடியாமல் இழைப்பதுமேன்
மனச்சாட்சி இழந்துவிட்ட மரணித்த மானிடமே

## சுமைகள்

சுமக்க முடியாமல் தவிக்கின்றது இன்று தோள்கள்
சுமந்திடத்தான் வேண்டும் எனக்கூறும் உள்ளம்
காவியம் படைத்திட்ட காலங்கள் போனது மறைந்து
காலமெல்லாம் என் தோளில் போட்டுவிட்ட நுகத்தால்
திகைத்துப் போய் தவிக்கின்றது மனம் சுமைகளால்

இழைத்துப்போய் இழக்கின்றது ஜீவன் தேகத்தில்
இமைப்பொழுதும் சுகமில்லை அவ்வளவு சுமைகள்
திடுக்கிட்டு எழுந்திட்டால் இதயமெல்லாம் படக்கென
அடிக்கிறது
திடன் கொண்டு நின்றிடவும் முடியவில்லை களைப்பால்
அனுதினமும் தவிக்கின்றேன் இந்தப் பாரச்சுமையால்

அன்போடு நேசிக்கும் நண்பர்களும் வெறுக்கின்றனர் என்னை
அனுதினமும் சீராட்டும் வசந்தமும் கடந்து போகிறது
எல்லையில்லாத ஏமாற்றம் என் மனதில்
ஏக்கம் கொடுத்திடும் உள்ளம் ஆறாமல் என்றும்
ஏற்றிட முடியாமல் தவிக்கின்றேன் இந்த சுமைகளால்

உள்ளம் எல்லாமே ஊற்றெடுக்கும் பாரமான சுமைகளை
உன்னத வாழ்வு கண்டிட முடியாமல் நுகத்தடிகள்
உள்ளமதை உருவக் குத்தும் இரும்புப் புயங்கள்
உணர்வில்லா ஊமையாக சுமக்கின்றேன் இந்த வாழ்வை
குறைத்திட முடியாமல் தவிக்கிறது உள்ளம் சுமைகளை

நினைவுகள் நிஜமாக தொலைக்கிறது என் வாழ்வில்

நித்திய காலமாய் மறைக்கிறது என் வழிகளை
நடக்க முடியாமல் களைத்துப்போய் கிடக்கிறேன்
நித்திய நிந்தைகள் என் வாழ்வில் அனுதினமும்
கலைக்க முடியாத கனவுகள் என் சுமைகளாக

அரவணைக்கும் அன்பானவர்கள் தள்ளிவிடும் நேரம்
ஆகாயத்தூரம் வரையில் வெறுத்திடும் நாட்கள்
எழுந்திட முடியாமல் திகைக்கின்றது என் கால்கள்
ஏமாறிப்போய் மடிகின்றேன் இந்தச்சுமையால்
தள்ளாடி அலைகின்றேன் என் பாரச் சுமைகளால்

உள்ளமெல்லாம் ஆறாத ஊற்றாக என்னில்
உறைந்திடும் பனி போல அனுதினமும் உளமதை வாட்டுகிறது
தீமைகளால் நிறைந்திடும் என் நண்பர்களின் வாழ்வால்
தீராத வேதனைகள் சுமந்து தள்ளாடும் பாதங்கள்
சுமைகள் இல்லாத நொடிகள் இல்லாமல் தவிக்கின்றேன்.

தூங்கிட முடியாமல் உள்ளமெல்லாம் பாரத் தவிப்புகள்
தாகம் கொண்டு நடக்கின்றேன் உள்ளக் குமுறலால்
மாற்றிட முடியாமல் மனமெல்லாம் இரத்த வடுக்கள்
மாறாத்துயர் கொண்டு அலைகின்றேன் இங்கு
தீராத உள்ளத் தவிப்புடன் இன்று சுமைகளால்

## விட்டில் பூச்சிகள்

வெளிச்சத்தை தேடியே தினம் பறக்கும்
வேகத்தை அனுதினமும் விரைவுபடுத்தும்
வீறாப்பு கொண்டு தினம் நடக்கும்
வினையினை தினம் தேடும் மங்கையரே
அறியாப் பேதையராய் நீர் விழுவதேனோ

துணிவினை சொந்தமாய் ஏற்றுக்கொண்டு
துடித்திடும் இதயத்தை பறிகொடுத்து
தயக்கங்கள் இல்லாமல் தினம் பறக்கும்
திகைப்புகள் இல்லாத அழகான கன்னியரே
தடுமாறும் கால்கள் என அறியீரோ நீர்?

பறந்திட நினைத்திடும் அழகான நினைவுகள்
பாவம் நீரென சொல்ல மறந்ததேனோ
பாதை காட்டிடும் வாழ்க்கைப்பாதைகள்
பரிதவிப்பீர் நீரென கூறிட தயங்குவதேனோ

திகைப்புகள் எல்லாமே சில காலம் மட்டும் தான்

வாழ்க்கை எல்லைகளை கடந்திடும் உணர்வுகள்
வாழவைக்கும் மனிதத்துவத்தை களற்றிடும் வினாடிகள்
துணைதேடி தினம் பறக்கும் வாழ்க்கை
துக்கத்தை உமக்கு கொடுத்திடும் அறியீரோ
நிலையான வாழ்வுண்டு அறிந்திடும் வாலிபரே

கண்டவுடன் மனதினை கொடுத்திடும் இச்சைகள்
கேலியாய் மாறிடும் சில காலம் உம்வாழ்வு
அல்லல் அனுதினமும் பட்டிடும் ஜீவியமாய்
அலைந்திட எண்ணுகிறீரா அன்பான நண்பர்களே
உடைந்திடும் கண்ணாடியைப் போல் சிதைந்துவிடும் உம்
வாழ்வு

வெளிச்சத்தை தினம் தேடி அலைகின்ற
விட்டிப்பூச்சிகளாக நீங்கள் எதுவரைக்கும்
வீறுகொண்டு எழுந்திடுங்கள் வினைகொண்ட வாழ்வு விட்டு
விடியல்கள் உமக்காக அனுதினமும் காத்திருப்பு
மாயமான எல்லைகளை முடித்திடுங்கள் மனதை விட்டு

இலவம் பழத்திற்கு காத்திருக்கும் கிளி போல
இகல்வடையும் அல்லலை அகற்றிடுங்கள் இன்றே
துணைதேடி ஏமாறும் துன்பங்கள் வேண்டாம்
துக்கங்கள் கொண்ட துணையும் வேண்டாம்
இளங்காலைப் பொழுதின் விடியலாய் மலர்ந்திடுங்கள்

கண்ணீரால் அலை மோதி அழிந்திட வேண்டாம்
காலத்தை வென்று சரித்திரம் படைத்திடுங்கள்
பட்டுப்பறவையாய் திரிந்து மகிழ்ந்திட்டு
பவனி செல்ல சென்றிட்ட விட்டிப்பூச்சி போல
வெளிச்சத்தில் எரிந்திடாமல் வாழ்வை மாற்றிடுங்கள்

கோணல்கள் நேராகும் வாழ்வை கண்டிட
கெம்பீரமாய் எழுந்திடுங்கள் நிரயணிக்கும் வாழ்வு காண
உமக்காக தவமிருக்கும் தெய்வீக எல்லைகளை
உரிமையாக்கிட வந்திடுங்கள் நுகத்தடியை அகற்றிவிட்டு
நிஜமாக மிளிர்ந்திடும் உம் வாழ்வு எண்ணிடுங்கள்

துணைதேடி அலைந்து விட்டு துன்பத்தை பெற்றிடாமல்
தூண்களாக நின்றிடவே நினைத்திடுங்கள் வாழ்வை
திகைப்புகளை களைந்து விட்டு நிச்சயத்தை அணிந்திடுங்கள்

திரளாக மிளிர வைத்திடும் உம்முடைய கனவுகளை
அறிந்திடுங்கள் விட்டிப்பூச்சிகளாய் ஏமாறும் அவல வாழ்வு
வேண்டாம்

## என் சுவாசக்காற்றே

உயிருடனே இருந்து நான் அனுதினமும் வாழ்ந்திட
உயிரோட்டம் கொடுக்கின்ற என் சுவாசக் காற்றே
சில தடவை எனக்குள்ளே அலைமோதி
சீற்றம் கொண்டிட வைத்திடும் உன் தோழமை

உனைப் பிரிந்து என்னால் வாழ முடியாது
உலகில் ஒளிர்ந்திட நீ மட்டும் போதுமடி
தொலைவில் நீயிருந்தால் துவண்டு போவேன்
தோள் கொடுக்க நீ மட்டும் போதுமடி

திகைத்திட வைத்திடாமல் தினமும் மலர்ந்திடு என்னில்
தளர்வுகள் இல்லாமல் காத்திடு தினம் என்னை
கல்லறை காணாத என் உணர்வுகள் உன்னால்
காவியம் படைத்திடுது உணர்ந்திடு என் சுவாசக் காற்றே

இதயத்தை வருடி தினம் இம்சை செய்யும்
இவ்வாழ்வின் அடித்தளமே என் சுவாசக்காற்றே
இமைக்காமல் அனுதினமும் இசைத்திடு என் இதயத்தில்
இன்பமான கானமதை என்றும் என் சுவாசக்காற்றே

முகவரிகள் தொலைந்துவிட்ட கடிதம் போல
நினைவுகளில் நீ என்னை தனிமைப்படுத்தாதே
அகம் மகிழ என்னுள் அனுதினமும் தங்கிடு
அமைதியை தினம் தந்திடு என் சுவாசக்காற்றே

இதுவரையும் என்னை சுமந்து காத்துக்கொண்டாய்
இகழ்வினிலும் புகழ்வினுலும் தாங்கிக் கொண்டாய்
இனிமேலும் சுமந்து கொள் என்னுயிரே
இவ்வுலகில் என்னுரிமை நீதான் என் சுவாசமே

உனைத்தேடி அனுதினமும் இழைத்துப் போனேன்
உலகினிலே உனைக்காண மாட்டேனோ என்றும்
உண்மையாக கூறுகின்றேன் உணர்ந்திடு நீயின்று
உன்வதனம் காட்டிடு என் சுவாசக்காற்றே

முகம் தெரியா ஆருயிரின் உறவு நீதானடி
முகம் காட்ட நாணுகின்ற அழகி நீயடி
தேடித்திகைக்கின்றேன் எனக்குள்ளே உன்னைத் தினமும்
தேடலின் முடிவை தந்திடு என் சுவாசக்காற்றே

இதயத்தில் மறைந்து என்னை இனிமையாக மாற்றுகின்றாய்
இமைப்பொழுதும் மறந்திடாமல் எனக்குள் வந்திடுவாய்
கண்கள் மூடி உறங்கிடாமல் எனக்காக தவிக்கின்றாய்
கவி பாடி தாலாட்டுகிறேன் என் சுவாசக்காற்றே

மழலையாக வந்த போது மனதில் வந்தாய் நீ
மரிக்கின்ற நாள் வரைக்கும் என்னை சுமப்பாய்
மறவாத நட்பினை என்னில் கொண்டாய் - உன்
மகத்துவத்தை கூறுகின்றேன் இசைத்திடு என் சுவாசக்காற்றே

## நொறுங்குண்ட இதயம்

இவ்வுலகின் இம்சைகள் பல கண்டு இன்று
இதயத்தின் பாகங்கள் திசைமாறிப் போயிற்று மனதில்
நோவினை தினம் கண்டு நொறுங்கிப் போயிற்று இதயம்
நெகிழ்வுகள் பல சகித்து நொறுங்குண்ட இதயமாக இப்போ

ஏற்றம் இறக்கங்கள் பல தடவை வந்ததால்
ஏமாற்றம் அடைந்து எறியப்பட்டேன் நான்
சகிக்க முடியாத பாதைகளை தாண்டியதால் இன்று
சமாதானம் இன்றி நொறுங்கிப் போயிற்று என் இதயம்

வாழ்க்கையில் கலந்திட்ட சோக நிமிடங்களால் இன்று
வலிமையற்றுப் போனேன் உயிரற்ற பிணமாக நான்
எழுந்திட துடிக்கின்றேன் ஏணியைக்கண்டு நான்
எழுந்திட முடியாமல் தவிக்கிறது நொறுங்குண்ட இதயம்

பயணிக்க முடியாத பயணப்பாதைகளை தினம்
பற்றிட நானும் விரைகின்றேன் ஆவலுடன்
நிமிர்ந்திட முடியாமல் தினம் என்னை ஆழமாக
நெருக்கி ஏவுகின்றது நொறுங்குண்ட என் இதயம்

நகர்ந்திட முடியாத நடை பிணமாக நான்
நாளாந்தம் துடிக்கின்றேன் என் வாழ்வின் சோகத்தால்
கரங்களை திடப்படுத்தி கால்களை பலப்படுத்த முடியலை
கண்ணீரால் வேகுகின்றேன் நொறுங்குண்ட இதயம் கண்டு

மகிழ்ச்சியை தொட்டு உணர்ந்திட முடியலை என்னால்
மானிடம் செய்திட்ட சோகத் துளிகளால் இன்று
மனம் நிறைவு பெற்றிடாமல் மடிகிறது தினமும்
நெகிழ்வுற்றுப் போனேன் நொறுங்குண்ட என் இதயத்தால்

இதயத்தின் இரு சோணை அறைகளையும் தேடியே
அலைகின்றேன்
இழைத்தபடி தேடுகின்றேன் குருதி சிந்தும் இதயத்தால்
இமைப்பொழுதும் சுகமின்றி தவிக்கின்றேன் நான்
இதயத்தின் நிலை கண்டு பதறியே போனேன்

மாறாத வடுக்களாக வந்திட்ட சோக ஊற்றை
முகிலாக படர்ந்து விட்ட இவ்வாழ்வின் கொடுமையை
வேகமாக அடைத்திட தினமும் எண்ணுகிறேன் நான்
வேதனை தாங்க முடியாமல் தவிக்கின்றேன் இன்று

நெருப்பாக எரிகின்ற ஜீவியத்தின் கசப்புகள் இன்று
நெருங்கியே அழுத்துகின்றது அடங்காத அட்டகாச ஊற்றாக
கண்டிட துடிக்கின்றேன் வாழ்வின் இனிமையான நிமிடங்களை
காணமுடியாமல் தடுக்கிறது நொறுங்குண்ட இதயம்

துடிக்க முடியாமல் துவண்டு கிடக்கிறது இதயம்
துண்பங்கள் சகித்து இழைத்தது என் இதயம்
திகைப்புகள் கண்டு திணறுகிறது என் இதயம்
தோல்விகளால் இன்று நொறுங்குண்ட இதயத்துடன் நான்

## நிலையான வாழ்வு தேடி

நிஜமற்றுப்போன என் கனவுகள் இன்று
நிலையற்றுப்போய் விட்ட தூண்டல்கள் என்னில்
துன்பத்தை சுமக்கின்ற சிலுவைகள் பல மனசில்
தூய்மை இல்லாத நிலையற்ற வாழ்வு இன்று

நித்தமும் படுகின்ற துன்பம் கண்டு நான்
நீண்ட தூரம் சகிக்கின்றேன் துன்ப மழையை
மனசிலே கிலேசங்கள் பல என்னை தினமும்
மறுக்காமல் தடுக்கின்றது எல்லை தாண்ட முடியாமல்

நிலையற்ற வாழ்வு என துடித்த பொழுதுகள்
நிமிர்ந்திட முடியாமல் முதுகிலே நுகங்கள் பல

உதறியே தள்ளிவிட்டு எழுகிறேன் நான்
உதயம் கண்டிட நிலையான வாழ்வு தேடி

வாழ்க்கை நீரோட்டத்தில் கலந்திட்ட நச்சு வாயுக்களாய்
வாழ்வில் கலந்திட்ட துன்பத்தை இன்று நான்
அகற்றியே உதிக்கின்றேன் காலைக்கதிரோன் போல்
அமைதியினை பெற்றிட நிலையான வாழ்வு தேடி

மனிதாபிமான மேன்மையை மீறிய காரணத்தால் இன்று
மரிக்கின்ற ஆத்துமாவுடன் அலைகின்றேன் நான்
அழகான வாழ்வினையே அமைதியுடன் கழித்திட இன்று
அமைதியை நாடுகிறேன் நிலையான வாழ்வு தேடி

துன்பத்தை சகித்து துயரத்தை அணிந்து நான்
துடிக்கின்றேன் இன்று தவிக்கின்றேன் அணு அணுவாய்
தவித்திடும் என் வாழ்வை தித்திப்பாய் மாற்றிட
தவிக்கின்றேன் நான் நிலையான வாழ்வு தேடி

துயரத்தால் துவண்டு போன என் வாழ்வு
தூணாக நிற்கமுடியாமல் தடுமாறும் கால்கள்
தினம் தினம் அணு அணுவாய் இறக்கின்றேன் நான்
துணையாக தேடுகிறேன் என் நிலையான வாழ்வினை

தித்திப்பு கொடுத்திட்ட என் அழகான மண்
தீராத விளையாட்டுப் பிள்ளையாக என் தங்கை
கண்ணீர் இல்லாமல் நடமாடிய என் ஆற்றங்கரை
காதோரம் சேதி சொல்லும் என் தென்றல்

துவண்டு போய் தேடுகின்றேன் என் வாழ்வை
துக்கமுகம் கொண்டு அலைகின்றேன் நான்
தவிக்கிறது மனசு அலைமோதும் வாழ்வால்
துடிக்கின்றேன் அனுதினமும் நிலையான வாழ்வு தேடி

துடிக்கின்ற என் இதயத்தை மறுபடியும் அணைக்கின்றேன்
துன்பக்கேணியினை அகற்றுகின்றேன் என்னை விட்டு
இன்ப வாழ்வை அனுதினமும் அனுபவிக்க நான்
இன்று வீறு கொண்டு எழுகின்றேன் நிலையான வாழ்வு தேடி

# இன்ப மழை

இனிமையான ஊற்றாக வருகின்றது வாழ்வில் இன்பமழை
இதயத்தை நனைத்து இனிமை சேர்க்கும் நல்ல
திலகம் போல் என் வாழ்வில் இந்தமழை
தினகரன் போல் வந்திட்ட இந்த இன்ப மழை

வாழ்க்கையிலே பல படிகளை தாண்ட வைத்து
வலிமைகள் சேர்த்திடும் இன்ப கானமழை
என் இமைகளை நனைக்கிறது இன்று மழையாக
எனதருகில் வந்திருக்கும் என் இன்ப மழை

கும்மாளம் என் வாழ்வில் இப்போது அலையாக
குதிக்கின்றேன் நான் இன்பமழை அதிலே
திகைப்புகள் இல்லாமல் துடிக்கின்றேன் கானமழையில்
துவட்டங்கள் அற்று துணிவுடன் எழுகின்றேன்

வாழ்வில் கலந்திட்ட இன்பஊற்று இது
வலிமைகள் இல்லாமல் நனைகின்றேன் இம்மழையில்
துணிவுடன் எழுகின்றேன் இந்த ஊற்றிலே நான்
தூறல் போல எனை நனைக்கும் இன்பமழையால்

தனிமையை அகற்றிவிடும் இந்த அன்பு மழை
தாகம் தீர்த்திடும் தித்திப்பின் பாசமழை
தூண்டிடும் என் சிகர உணர்வுகளை இன்று
துணையாக தேடி வந்த இந்த இன்பமழை

தாகம் தீர்த்திட வந்திட்ட சின்னமழை
தனிமையைப் போக்க வந்த இன்பமழை
நிஜமாக கனவுகளை மாற்றிடவே என் உள்ளமதை
நித்தமும் நனைக்கின்றதே இந்த இன்பமழை

தவிப்பினைத் தீர்த்திட்ட என் மனசில் தினம்
தாகத்துடன் வந்து சேரும் இந்த கானமழை
சுகமுடன் நிலைத்திட என்னைத்தேடி வந்திட்ட
சுகந்த வாசம் தந்திடும் இன்பமழை

கனவினை மாற்றிட என் மனசில் வந்து
காதோரம் பற்பல கதைகள் கூறி தினம்
தியாகம் கொண்டு வந்திடும் என்வாழ்வை
தித்திப்பாய் மாற்றிடும் இந்த இன்பமழை

துன்பத்தின் கறையை மாற்றிட வரும்
துயரத்தை தினமும் அகற்றிட வந்திடும் நல்ல
தித்திப்பு கொடுத்திடும் இதமான காற்றாக என்னில்
தினமும் வந்து கலந்திடும் இன்பமழை

தாகம் தீர்க்க தினம் விரைந்து வரும்
தாயகத்தில் என்னை வாழ வைக்கும் நல்ல
கலைப்படைப்பை படைத்திட தினம் தேடிவரும்
காதோரம் வந்து சேரும் இன்பமழை.

## வாடாமலர்

மணம் வீசும் சின்ன மலராக நான் இப்போ
மனக்கிலேசம் அற்ற மழலையாக நான் தினமும்
திகைப்புகள் இன்றி திண்டாட்டம் போடும் உள்ளம்
தினகரன் போல் உதிக்கின்றேன் வாடாமலராய் புவியில் நான்

பலர்வாழ்வை கொன்ற காலத்தாய் என்னையும் அன்று
பகைக்காமல் காத்திட்ட அற்புதப் புண்ணியத்தால் இன்று
புதுப்பொலிவு கொடுக்கின்ற புதிதான வைரம் போல்
பூரிப்புக்கொள்கின்றேன் நல்ல வாடாமலராய் தினம்

முகவரிகள் தொலைந்த கடிதமாய் மாறிய என்னை
முன்னேறி செல்ல வைக்கும் எனதருமை நட்பு அது எனக்கு
காலத்தாய் கொடுத்திட்ட கதைகூறும் இன்பத் தென்றல்
கனிவுடன் சிரிக்கின்றேன் நானிப்போ தினமும் வாடாமலராய்

வாழ்க்கையில் துன்பங்கள் வந்திட்ட போதும் நான்
துணிவையே எனதுயிராய் ஏற்றுக்கொண்டேன் இப்போது
தூய்மையை எண்ணி விரைகின்றேன் மலராக
நிஜமான வாழ்வு தேடி நடக்கின்றேன் வாடா மலராய்

துக்கங்கள் இல்லாத தூய்மையான வாழ்வு எனக்கு
துணிவையும் தந்திட்ட படிக்கற்கள் பல உண்டு
வதனத்தைக்காட்டி தினம் பூரிக்கிறது உள்ளம்
வளமான வாழ்வு கண்டிட்ட இந்த வாடாமலர்

கற்பனையை சுமந்து கனவுகள் பல நினைந்து
காலமதில் வென்று நான்காவியம் படைக்கிறேன்
தியாகம் கொண்ட உள்ளத்துடன் விரைகிறேன்
தீராத மகிழ்வுடன் பயணிக்கிறேன் வாடாமலராய்

# அதிபரின் ஆசிச்செய்தி

எமது கல்லூரியில் தரம் 11 இல் கல்வி கற்கும் செல்வி குயிலரசி முருகையா 2011ம் ஆண்டு தமிழ்த்தினப் போட்டியில் பிரிவு - 4 இல் கவிதையாக்கம் போட்டியில் பங்கு பற்றினார். கோட்டம், வலயம், மாவட்டம் ஆகிய மூன்று மட்டப்போட்டிகளிலும் முதலாம் இடத்தைப்பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துத் தந்தவர். மேற்படி போட்டிகளிற்காக பயிற்சியில் ஈடுபட்டபோது கொடுக்கப்பெற்ற தலைப்புகளில் மிகவும் சிறப்பாக எழுதியுள்ளார். இம்மாணவியின் குடும்ப நிலை மிகவும் கஸ்டமான போதும் கல்வியிலும் கவிதையாக்கத்திலும் ஆர்வமுள்ளவராக காணப்படுகின்றார். இவரது கவிதைகள் யாவும் தமது குடும்ப வறுமை நிலையைச் சித்தரிக்கும் பாங்கிலேயே அமைந்துள்ளன. இக்கவிதை ஊடாக ஏழ்மை நிலையிலிருந்து கல்வி கற்கும் ஒரு மாணவியின் உணர்வுகளை காணக்கூடியதாக உள்ளது.

இம்மாணவியின் கவிதையாற்றலை மேம்படுத்தும் நோக்கோடும் எதிர்காலத்தில் மிகச்சிறந்த கவிதைகளை ஆக்கும் வல்லமை மிக்கவராக வருவார் என்ற நம்பிக்கையிலும் இவரது கவிதைகளை சிறுபிரசுரமாக எமது கல்லூரியின் தமிழ்ச்சங்கத்தினர் வெளியிடுவதையிட்டு மிகவும் மனம் மகிழ்வடைகின்றேன்.

க.இ.இராசசேகரம்
அதிபர்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

2011.09.23

# மாணவியின் கருத்து

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் 2011ம் வருடம் தரம் 11ல் கல்வி கற்கும் செல்வி குயிலரசி முருகையா ஆகிய நான் தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றுக் காரணமாகவும், கவிதை நயப்பதில் கொண்ட ஈடுபாடு காரணமாகவும் தமிழ்த்தினப் போட்டியில் கவிதையாக்கத்தில் பங்கு பற்றினேன். அப்போட்டிக்காக எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிகாட்டியாக விளங்கிய ஆசான்களின் நெறிப்படுத்தலில் நான் யார்த்த கவிதைப் பூக்களை பாடசாலைச் சமூகம் தமிழ் விழாவில் வெளியிட முன்வந்தமைக்கு எனது நன்றியை காணிக்கையாக்கி சிரம் தாழ்த்துகின்றேன்.

நன்றி

குயிலரசி முரகையா
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி